1978 செப்டம்பர் 2]

**திரு. கு. ரமணி:** 200 பேர்களுக்கு இன்னும் வீடில்லாமல் இருக்கிறது என்பது அமைச்சர் பதிலிலிருந்து தெரிய வருகிறது. அந்த ஊழியர்கள் குறிப்பிட்ட நேரத்தில், காலை 5 மணியிலிருந்து வேலைக்கு வரவேண்டியவர்கள். ஆகவே, வீட்டு வசதி வாரியத்தின் கீழ் பல வீடுகளை, அவர்களுக்கு இறுதியாக வீடு கட்டிக் கொடுக்கும் வரையில், தற்காலிகமாக ஒதுக்கிக் கொடுத்து உதவி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இந்தக் கேள்வியினை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரிடம் கேட்டிருக்க வேண்டும். இருப்பினும் அந்த வீடுகளுக்கு முன்னுரிமையோடு பலர் காத்திருப்பதால், பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக் கூடிய சாத்தியக் கூறு இராது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## தென்பெண்ணை ஆற்றுப் பாசனக் கால்வாய்கள்

* வினா எண் 54—**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்பெண்ணை ஆற்றின் கரை ஓரத்தில் இடது-வலது புறம் செல்லும் பாசனக் கால்வாய்களைச் சீரமைத்துத் தர அரசு ஏதேனும் செயல் திட்டம் வைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) எப்பொழுது சீரமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) இல்லை.

(ஆ) & (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவரவர்களே, தென்பெண்ணையாற்றின் வற்றாத நீரைப் பயன்படுத்தி பாசனத்தை வளப்படுத்த அரசு ஏதேனும் புதிய திட்டத்தை வகுத்திருக்கிறதா? அப்படியென்றால், அதைப்பற்றி தீவிரமாக ஆராயுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, தென்பெண்ணையாற்றிலிருக்கிற அணைக்கட்டுக்குக் கீழுள்ள எல்லாப் பாசனக் கால்வாய்களையும் சீரமைத்துப்

பாசனத்திற்கு அதிக அளவு பயன்படும் வகையில் சீரமைக்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### வைப்பாற்றின் குறுக்கே அணை

*வினா எண் 55—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதி வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-40)

**திரு. ரா. கு. பெருமாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறிய திட்டம் ஏற்கனவே 1 கோடியே 65 லட்சம் என்று திட்டம் இடப்பட்டு அன் எக்கனமிக்கல் என்று புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு கேள்வி மூலமாகவும், துணைப் பொறியாளரைப் பார்த்தும் பேசியதில் இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தினார்கள். அது இப்போது ஆய்வு செய்யப்பட்டு 8 கோடி ரூபாய் திட்டத்தில் தலைமைப் பொறியாளருக்கு வந்திருக் கிறது. எனவே அரசும் அமைச்சரும் முயற்சி எடுத்து இந்தத் திட்டம் கொண்டுவர வாய்ப்பு உண்டா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் விளாத்திக்குளம் தாலுகாவிலே தென்மேனி கிராமத்தின் அருகே உள்ள வைப்பாற்றில் அணை கட்டுவதற்கு ஒரு திட்டம் முன்பு ஆய்வில்